சைவ பரிபாலன சபை வெளியீடு:
ஆரம்பம்: விரோதி ஆ (1889) ஆவணி மீ 28-உ

உ
சிவமயம்

செய்தித்தாளைப் பதிவு பெற்றது

University of Jaffna Sri Lanka
RECEIVED
Periodicals Division
Library

# இந்து சாதனம்

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

Hindu Organ

பிரதி விலை: சதம் 40

புத்- 93] யாழ்ப்பாணம்:- துந்துபி ஆ, ஆவணி மீ 20, 27-8-82 வெள்ளிக்கிழமை [இல-6

## தொண்டமானாற்றுத் தூய தீர்த்தம் துலங்கும் செல்வச்சந்நிதிச் சேவற்கொடியோனுக்கு
# மாவிழாக்கள் மகத்தாய் மலர்ந்தாரம்பமாயின

மாவைக்கும் நல்லைக்கும் முறையே வழிபாடு செய்ய நெடுவழி சென்ற வழிபாட்டடியார்கள் இப்பொழுது துர்க்கைக்கும் சந்நிதி முருகனுக்கும் தங்கள் அர்ச்சனையைச் செய்ய யாத்திரை செய்யும் காட்சி பொலிகின்றது.

ஆற்றங்கரை ஆறுமுகற்கு ஆகும் பெருவிழாக்களில் ஆயிரம் ஆயிரம் அடியார்கள் ஆண்டாண்டுகூடி அநுக்கிரகம் பெற்றானந்த மயமாய் விளங்குவது வாழ்க்கையின் இன்றியமையா அம்சமெனலாம்.

தொண்டர்க்குத் தூயநெறித் தோற்றமாய்த் தொல்லைநீள் வண்டமிழ் வாழ்நிலத்தோர் வாழ்வுயரத் — தொண்டைமான் தீர்த்தமெனுஞ் சிற்றாறு செய்வனப்பிற் சிக்குமரன் மூர்த்தியாய் முன்னின்றான் முன்.



திருச்சிற்றம்பலம்,
நண்ணினர்க் கினியா யோலம்
ஞானநா யகனே யோலம்
பண்ணவர்க் கிறையே யோலம்
பரஞ்சுடர் முதலே யோலம்
எண்ணுதற் கரியா யோலம்
யாவையும் படைத்தாய் யோலம்
கண்ணுதற் பெருமா னல்குங்
கடவுளே யோல மோலம்.
திருச்சிற்றம்பலம்.

குக்கிராமங்கள் முதல் எல்லாக் கோணங்களிலும் இருந்து கொடி கொடியாக அணி அணியாக

## அடியார்கள் ஆயிரம் ஆயிரம் அலையாக ஆரவாரம்! எழுச்சி!

## துர்க்கை அம்பாள் கொடியேற்றங் கண்டுகொள்ள வந்த திருக்கூட்டம்

சிவ சக்தியே தஞ்சம், துர்க்கை அன்னையே துணை என்ற சிந்தனை தோன்றிச் சைவ சமய மக்களின் ஆத்மீக உணர்ச்சியை என்றுமில்லாதவாறு ஊக்குவித்திருப்பதைத் தெல்லிநகர் உளுமுடைப் பதியில் எழுந்தருளியிருக்கும் துர்க்காதேவிக்குரிய விசேட விழாக் காலங்களில் ஆங்கு கூடும் அடியார் கூட்டங்களின் பிரமாண்டத் தோற்றம் காட்டுகின்றது.

ஆவணித் திங்கள் ஐந்தாம் நாள் சனிக்கிழமை திரிதியைத் திதி உத்தர நட்சத்திரம் அமைந்த அரிய சுப தினத்தில் (21-08-82) துர்க்காதேவி ஆலயக்

(வளர்ச்சி 2ம் பக்கம்)

ஆத்மஜோதி' ஆசிரியர் அவர்களின் அன்புப் பணிக்கு

## பாராட்டும் வாழ்த்தும் பட்டாடைக் கௌரவமும்

மதுரை வித்தாச்சிரமத் தலைவர் ஸ்ரீ வித்தாஹரி சுவாமிகளாலே "சித்தஞானவித்தகர்" என்ற பட்டம் சூட்டப்பெற்று கௌரவிக்கப்பெற்ற ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்களுக்கு நல்லை ஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் 25-08-82 புதன்கிழமை மாலை நிகழ்ந்த பொது வைபவத்தில் சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமை வகிக்க நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ பரமாசாரியசுவாமிகள் பொன்னாடை போர்த்தி ஆசி வழங்கப்பெற்றது.

சித்தாந்தவித்தகர் மு. ஞானப்பிரகாசம், முத்தமிழ்க் குருமணி சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் கிரியா வித்தகர் சிவஸ்ரீ க. சிவபாதசுந்தரக் குருக்கள் பண்டிதர் மு. கந்தையா, சைவ நெறித் தொண்டர் கழகத் தலைவர் திரு. இ. சபாலிங்கம் இலக்கண வித்தகர் பண்டிதர் இ. நமசிவாயம், சிவதர்மவள்ளல் க. கனகராசா, இந்துசாதன ஆசிரியர் ஈல. சிவப்பிரகாசம் உட்படப் பலர் பாராட்டு வழங்கினர்.

சைவபரிபாலன சபை—

## சைவ சமய பாடப் பரீட்சை — 1982.

சைவ பரிபாலனசபையாரால் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பெறும் சைவ சமய பாடப் பரீட்சை 7-11.82 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

ஆலயங்களுக்கு ஆன முறையில் -

## நூலகம் அமைப்பு வேண்டும்

சிற்சில கோயில்களைவிட மற்றைய ஆலயங்களிலே வேத சிவாகமநூல்களோ திருமுறைப் புத்தகங்களோ, புராணபடிப் புகளோ வேண்டியபடி சேர்த்து வைக்கப்படாமலிருப்பது ஓர் பெருங் குறையாகும்.

ஆலயத்தோடிணைந்த நூலகம் அமைக்கப்படல் அத்தியாவசியமாகும்.

ஒவ்வொரு கோயிலும் அந்த ஆலயத்துக்குரிய விசேட வெளியீடுகள் — சிறப்பு மலர்கள் முதலியனவற்றைச் சேகரித்து வைப்பதுடன் ஆண்டுக்காண்டு வெளியிடப்படும் விஞ்ஞாபனங்களையும் சேகரமாகப் பேணி வைத்தல் மிகவும் வேண்டப்படுவதொன்று.

ஆலயத்தின் வரலாற்றை எழுதிப் பேணுதல் மிகவும் விரும்பத் தக்கதோர் தேவை.

சைவசித்தாந்த வெளியீடுகள் ஒவ்வொரு ஆலயத்திலும் கிடைக்கக்கூடிய ஒழுங்குகள் வேண்டும்.

அரசியல் ஏடுகள் பரவலாக பக்திச் சூழ்நிலையைக் கெடுக்கும் பிரசுரங்கள் இடம் பெறுவதையும், சைவ ஏடுகள் இலலாமற் போவதையும் இப்பொழுது எங்கும் காணலாம்.

[ வளர்ச்சி 3ஆம் பக்கம் ]

க தி ர் கா ம த் தி ல்

## வழி காண்போமா?

கதிர்காமத்தில் இந்துக்களுக்கோர் திருமடம் அரசினால் நிறுவப்பெறும் என்றும் அதற்குரிய ஆரம்பக்கல் நாட்டும் அத்திவாரவிழாவை இந்து அலுவல்கள் அமைச்சர் தொடக்கி வைப்பார் என்றும் அண்மையிற் செய்திகள் கூறின! சைவப் பெருமக்கள் உளம் இச்செய்தி கேட்டுப் பூரிப்படைந்தது.

எல்லோருக்கும் ஆறுதல் கொடுக்கும் செய்தியாக இது இருந்தது. எனினும் அத்திவாரம் இடுவதும் அதைப்பற்றி விளம்பரப்படுத்துதலுமே ஆகியும் அந்த முறைகப் பல நிகழ்ச்சிகள் இந் நாட்டில் நிகழ்ந்திருக்கின்றன. அத்திவாரம் இட்ட இடமே எங்கே என அறியமுடியாதவகையில் எல்லாம் பழங்கதையாய் விடுவதை மக்கள் அறிவர். ஆறுமுகசுவாமி அடியவர்கள் ஆறுதல் பெற்ற கதிர்காமச் சூழலில் முன் பல சைவத்திருமடங்கள் பொலிந்திருந்தன. அவற்றை இன்று காணமுடியாது அலைப்படும் அடியார்க்கு வரப்பிரசாதமாக அமையும் என்று சொல்லப்படும் இப்புது மடமும் அத்திவார நிலையிலேயே என்றும் நிற்காமல் மாணிக்க கங்கை நீராட்ட விழாவுடன் தொடர்ந்து நடந்து முற்றுப்பெற்று யாத்திரைக்காரர் தோத்திரங்களை மறுபடியும் அங்கு முழங்க வைப்பார் முருகப்பெருமான் என எண்ணுவதோடு கதிர்காமக் கந்தனை அயராது சிந்தித்தர்ச்சனை செய்வோம்! எழட்டும் ஆங்கு முன்னைய அருட் சூழலே!

மாணிக்க கங்கை மணிக்கரையில் யாத்திரிகர்
காணிக்கை கந்தன் கதிர்காமன் — பேணிக்கொண்
டந்நாள் அமைத்தமடம் அம்ம! அழிந்ததுவே
இந்நாள் புநரமைப்போ மே.

## பக்தியின் இயல்பு

[சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தசிவாசாரியர், சுன்னாகம்]

உலகங்கள் அனைத்திற்கும் ஆதியான இறைவன் மீது மனிதனுக்கு எழுகின்ற கவர்ச்சியே பக்தியாகும், இக்கவர்ச்சி மனிதனுக்கு மட்டுமின்றி இயற்கை முழுவதிலும் காணப்படுகின்றதென்று ஆராய்ந்தறிந்தோர் கூறுகின்றனர், அண்டங்கள் பிண்டங்கள் ஆகிய அனைத்திலும் கவர்ச்சியாகிய சக்தி நடனம் புரிவதை நாம் உணருகின்றோம். பூமி, சூரியசந்திரர், நட்சத்திரங்கள் யாவுமே இக்கவர்ச்சிச்சக்தி மூலமே நிலைபெற்று விளங்குகின்றன:

நாம் வாழும் பூமியும் நீரும் மரங்களின் வேரை கீழ்நோக்கி இழுக்கின்றன. சூரிய ஒளி கிளைகளை மேலே இழுக்கின்றன. பூக்கள் மலரும்போது தமது மணத்தாலும் நிறத்தாலும் தேனினாலும் வண்டு பூச்சி பறவை முதலானவற்றுடன் மனிதரையும் கூடக் கவர்ந்திழுக்கின்றன. அழகிய பூக்களையுடைய மரங்களையும் இனிய பழங்களை நல்கும் மரங்களையும் மனிதன் பேணிப் பாதுகாத்து வளர்ப்பதற்கு இக்கவர்ச்சியே காரணமாகின்றது,

மேலும் விலங்குகள் மனிதர்கள் யாவருக்கும் குஞ்சுகள் மீதும் குட்டிகள்மீதும் சிறு குழந்தைகள் மேலும் எவர்க்கும் கவர்ச்சியேற்படுவது போலவே ஆண் பெண் ஆகிய இரு இனங்களும் ஒன்று மற்றொன்றின்மேல் கவர்ச்சி கொள்வது இயல்பாக உள்ளது,

( வளர்ச்சி 2ஆம் பக்கம் )

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

துந்துபி ஸ்ரீ ஆவணி மீ 20, 27-8-82 வெள்ளி

ஆலயங்களோ டணைந்த

## அறநிலையங்களின் அவசியம்

கோயில் வழிபாட்டுக் குறிக்கோளுடன் ஆயபடி அறம் வளர்க்கும் பணிக ளும் இயங்க வேண்டியதவசியம் என்பதை எடுத்துக் காட்டுவது இக் காலத்து நிலைமைக்கு இன்றியமையாது வேண்டப்படுகின்றது.

தொழுவதற்கு ஆலயங்கள் எத்துணை மனித வர்க்கத்திற்கு வேண்டப்படுகின்றனவோ அத்துணைக்கு அச்சூழலிலே அறம்வளர்க்கு நிலையங்களும் தேவைப்படுவதன் அவசியத்தை முன்னோர் அறிந்தனர், அவ்வழி அவ்வாறு பயன் கொடுக்கும் பணிகளை ஆற்றி வந்தனர்.

நீதி நெறியை மக்கள் அறிந்து உணர்ந்து அவ்வழி ஒழுகுவதற்கு முற்காலத்தில முடி மன்னன் வழி செய்தான். குடிமன்னர்களும் குறிக்கோளை அறிந்து அமைந்து வாழ்க்கையை நடத்தினர்,

வேத மோதும் அந்தணர்கள் அர்ச்சகர்களாக மட்டும் தொண்டாற்றவில்லையே! சிவநெறி பிறழாது வாழ்ந்து பொது மக்களும் பின்பற்றக்கூடிய உயர்ந்த ஒழுக்கத்தினைக் கடைப்பிடித்தனர். குருவாகவுள்ள இப் பெரியார்கள் உள நோய்க்கும் உடல் நோய்க்கும் மருந்து வழங்குபவர்களாகவும் சோதிட கணித வித்தகர்களாகக் கோள்களின் குண நிலை கூறி மக்களை ஊக்குவித்தனர்

மட பரிபாலனத்தால் விருந்தோம்பலும் பூங்காவினல் மலர்மாலை அமைப்பும் விளங்கின.

குருகுலம் அமைத்து அர்ச்சகர்களைப் பயிற்றும் சிவபணி நடந்தது.

அடியார்கள் தங்கள் ஓய்வு வேளைகளிலே ஆலயங்களைப் புனிதமாக்கிப் புறத் தொண்டு புரிந்தனர்.

இந்த நிலைமை இப்பொழுது இரண்டு மூன்று ஆலயங்களில் மட்டும் இயங்குகின்றது. ஏனைய கோயில்களிற் பெரு விழாக்காலங்களிலமட்டும் அடியார் கூடி விட்டு வேறு பணிகள் ஆற்றாது விடுகின்றனர்.

கள்ளம், கபடம், கயமை கடுங் கோபம் என்னும் பொல்லாக் குணம் போக்கக்கூடியன சற் சங்கங்களே, இந்தச் சங்கங்கள் இறைவன் சந்நிதானத்துக்கு அணித்தாக இயங்குமேயானால் விளையும் பயன் மேலாகும்.

புலால் உண்ணும் புன்மைப்பழக்கம் தோன்றாது. மதுவருந்தும் மதியின்மை வராது வன் செயலிற் புலன் செல்லாது.

மனித இனம் சமயாபிமானத்துடன் இனிது வாழும் மிருகவர்க்கம் உயிர் பிழைக்கும்; பொருள்வளத்துக்குரியனவாய் வளரும்! மாரி வளம் பெருகும்!

எல்லாம் இன்ப மயமாகும். ஆலயச்சூழலில் அறம் வளர்ப்போம். அனைத்துலகத்தையும் ஆனபடி வாழ வைப்போம்.

## குக்கிராமங்கள் முதல் ………

( 1 - ஆம் பக்கத்து வளர்ச்சி )



கொடி ஏற்றம் அன்று பகல் பன்னிரண்டு மணிக்கு அலை மோதும் ஆயிரம் பல ஆன அடியார்கள் உச்சிகளிற் கரங்கள் கூப்பிய வண்ணம் ஆனந்தமாய் 'அர அர' என்று அரற்ற வேதிய மேதாவிகள் ஓதிய வண்ணம், மங்கள வாத்திய இங்கித இசை எழுச்சி செய்ய மலர் இதழ்கள் மலைபோற் குவிய ஆலயமணி நாதம் எழத் தேவலோகக் காட்சிபோலத் திகழ்ந்தது,

பிரதம சிவாசாரியர் கொடித் தம்பத்தின் முன் சிவ வேடத்திலே திருமுருகன்போலப் பிரபையுடன் காட்சி ஆங்க் கிரியைகளை ஆற்றினர், அந்தணர் திலகங்கள் அவையாக வீற்றிருந்தனர். நாதசுர தாளவாத்திய மேதைகள் நீண்ட வரிசையாக மண்டபத்தில் அமர்ந்து மங்கள கீத ஓசை எழுப்பினர். வெண் சங்கம ஒலித்தது,

தேவத்தான நிருவாகத் தலைவரும் உறுப்பினரும் இந்து இளைஞர் சங்கத் தொண்டர்களும் ஏனைய தொண்டுப பணியினரும் நெறிமுறை தவறாது கரும ஒழுக்குகளைக் கண்காணித்தனர்.

x x x

தென்னகத்தின் தெய்வமாய்த் தேவிதிருவருள் மன்னுசிவச் சீர்பொலியும் மாதலமாம் — முன்னேஸ்வரத்தில் மகிழ்கின்றார் மாவிழாக் கண்டு சிரததிற் கரத்தடியார் தேர்ந்து.

## அச்சுக் கோப்பாளர் தேவை

தமிழ், ஆங்கிலம் அச்சுக்கோப்பாளர்தேவை காரியாலய நேரத்தில் நேரில் வரவும்.

அதிபர்
சைவப்பிரகாச அச்சகம்
450, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

## மகாதேவாப் பாலமும் மக்கள் கடமையும்

ஆமையும் நாணும் அவ்வளவு ஆறுதல் நடையில் ஆண்டுகள்பலவாக நிகழ்ந்து வரும் கேரதீவு — சங்குப்பிட்டிப் பால வேலை இப்பொழுது சற்று விறுவிறுப்பாக நடைபெறுகின்ற வாய்ப்பைப் பயன்படுத்திப் பொதுமக்களும் இந்தப் புனிதப்பணியில் உழவாரத் தொண்டாற்றிப் பரோபகாரம் புரிவது வேண்டப்படுகின்றது.

மகாதேவாப் பாலம் என்று நாமம் பூண்ட இந்த அமைப்பு வடபகுதி அபிவிருத்திக்குமாபெருந்துணையென்பதை யார்தான் அறியார்?

சின்னஞ் சிறிய கடல் என்றாலும யாழ்ப்பாணம் பரவைக்கடலைச் சுற்றிக் கொண்டுதான் அந்தக் கரையிற் கமஞ் செய்யும் மக்கள் போக வேண்டியிருந்துவந்தது. அவ்வாறே பல்லவராயன் கட்டு பொன்னெவெளி கிராஞ்சி முதலிய இடங்களுக்கும் வாகனப் போக்குவரத்துக்குச் சிரமமிருந்தது.

அறைவள்ளங்கள், ஓடங்கள, இழுவைப் படகுகள், ஒருவாறு இப் பணியைச் செய்து வந்தன. எந்திர இயக்கப் படகுகள் மேலும் சிரமத்தைக் குறைத்தது. எனினும் நேர் பாலம் நெடுஞ்சாலைப் போக்குவரத்து அளப்பரிய பொருளாதார இலாபத்தைக் கொடுக்கும் என்பதற்கையமில்லை!

சிரமதானம் எந்தப்பணியையும் சிறப்பிக்கும் ஆற்றல்படைத்தது. மக்கள் பலரின் நெற்றிவியர்வை நிலத்தில்நில்விழ எழும் சத்திக்கு இணையிடில்லை. எனவே எஞ்சிய பால வேலையில் நாம் எல்லோரும் ஈடுபடுவோமாக.

## சிவனடியார் சங்கமத்தில் 'ஆத்மஜோதி' நா. முத்தையா



[ 25-8-82 பாராட்டுவிழாவில் வழங்கப்பெற்றது ]

நேரிசை வெண்பா

இந்துமத மோங்குமிட மெங்கெங்குஞ் சென்றுகவி
முந்துபணி யாற்றும் முதுதொண்டன் — சந்தமுறும்
ஞானசித்த வித்தகனுர் நாமுத்தை யாநற்சீர்
ஆனதெரிந் தேத்தவல்லார் ஆர்.

ஏழாலையூர்ப் பண்டிதர்
மு, கந்தையா, B. A

## பக்தியின் இயல்பு

[ 1 ஆம் பக்கத்து வளர்ச்சி ]

இக்கவர்ச்சிச் சக்தியினாலேயே நாக்கும் நட்பும் விசுவாசமும் அன்பும் அபிமானமும் உண்டாவதை அறியலாம்.

இயற்கையுணர்வுகள் யாவும் இக்கவர்ச்சியாலேயே ஏற்படுவது மட்டுமின்றி வெறுப்புணர்ச்சி கூட இக்கவர்ச்சியாகிய விருப்பின் எதிர்ச்செயலேயாம். மக்களது தனிவாழ்விலும் சமூகவாழ்விலும் பல செயல்கட்குக் காரணமாக விளங்குவன. காமம் குரோதம் லோபம் மோஹம் மதம் மாற்சரியம் என்னும் ஆறுமேயாம். இவற்றில் காமத்திலிருந்து ஐந்து விதமான வேட்கைகளோடுசந்தர்ப்பத்திற்கேற்ப தோன்றுபவையே ஏனைய ஐந்தும் என்ப, எனவே காமம் ஆகிய கவர்ச்சியே அனைத்துக்கும் வித்தாக இருப்பதைக் காண்கிறோம்.

புற இயற்கைக்கும் அக இயற்கைக்கும் எங்கும் காணப்படும் இக்கவர்ச்சிச் சக்திதான் காரணம் என்பதனல் இதுவே அழியாத அடிப்படைத் தத்துவம் எனவும் மெய்ப்பொருளென்றும் எங்கும் வியாபகமாகவும் எவற்றிற்கும் அதீதமாகவும் விளங்கும் பிரம்மம் என ஞானிகள் வர்ணித்தனர். இதைப் பெயரிட்டு அறிமுகப்படுத்த முயன்றவர்கள் "ஹரன்" —"ஹரி" "கிருஷ்ணன்" எனப் பலவாறிட்டழைத்தனர். இவற்றின் பொருள் இழுப்பவன் அபஹரிப்பவன் ஆகர்ஷிப்பவன் என்பதாகவேயுளது இதையே "அன்புமயம்" என்று பெரியோர் கூறியுள்ளனர். இந்த அன்பையே சக்தி என்றும் அதன் விளைவையே இன்பமாகிய சிவம் என்றும் கூறுவர்.

வளரும்

அறுபதாண்டுகளாக
அயராதுழைக்கும் அரிய சங்கம்
ஏழாலை சைவ சபை
அபிவிருத்தியினரின்

## வைர விழா

காலவட்டங்களில் ஒன்று அறுபதாண்டு எல்லை. அத்தகைய உத்தம சாதனையைச் செய்யும் சமய சங்கங்கள் மிகச்சிலவே. யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை, கொழும்பு விவேகானந்த சபை போன்றவற்றின் அடிச்சுவட்டில் நின்று உள்ளூரில் ஒருசங்கம் வைர விழா மகிழ்ச்சி கொள்வது சமயாபிமானிகள் யாவருக்கும் ஊக்கத்தைக் கொடுப்பதாகும்.

இவ்விழா ஆடித் திங்கள் ( 14-08-82) ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை மண்டபத்தில் நிகழ்ந்தது. சிவபூசை, சிவபூசை பற்றிக் கலந்துரையாடல் சிவபூஜா துரந்தரர் சிவக்கோல ஊர்வலம் ஆகும் பயனுள்ள அம்சங்கள் அன்று காலை தொடங்கி மாலைவரை ஒழுங்குநிரலில் அமைந்தமை விழா அமைப்பாளர்களின் சிவ சிந்தனைச் செம்மையைக் குறிக்கின்றது.

தலைவர் திரு. சி. சக்திகிரீவனின் உரையுடன் வரவேற்புரை, விசேடஉரை, குறிப்புரை மலர்வெளியீட்டுரை, சிறப்புரை என்ற வகையிற் சைவஅறிஞர்கள் கலந்துகொண்ட இவ்விழா சமய எழுச்சிக்கு உணர்ச்சி நல்கும் பான்மையுடையதாகக் காணப்பட்டது.

# நாடக இலக்கணமும் இலட்சியமும் நிலைநாட்டிய கலை அரசு

'நாடகமே உலகம் என்று சொல்லிய ஞானிகள் வாழ்க்கை நடைமுறையை நாடகத்திற்கு ஒப்பிட்டமை மாகில வரலாற்றில் நாடகத்திற்கும் இடமுண்டென்பதே.

இந்த இசைக் கலையை எந்நாட்டவர்களும் பயின்று பயன்படுத்தி வருகின்றனர் ஆனால் செந்தமிழ் இசைக் கலை நாடகம் அம்மொழி பேசும் மக்களின் சமய வாழ்வுக்கும் வழிகாட்டியாக அமைந்து வந்திருக்கின்றது.

நடராச நடனம் மயில் நடனம், காவடி ஆட்டம் போன்ற அதி உன்னத அம்சங்கள் அமைந்துள்ள தமிழ் நாடகங்கள் கலை இயலை வளர்த்து நிலவி வருகின்றது.

இத்தகைய கலை உலகில் இத்துறையில் நுண்புல

(வளர்ச்சி 4ம் பக்கம்)

## புராண படனம்

வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலில் தினமும் மாலை 6-30 — 7-30 வரை திருவிளையாடற் புராண படனம் நடைபெறுகிறது.

இலண்டனில்

## வேற்று இனத்தாருக்கு ஒரு பத்திரிகை

வெள்ளையர்கள் அல்லாதவர் - பிரித்தானியரல்லாதவர் - வேற்றுநாட்டவர்கள் பற்றிய செய்திகளை வெளியிடவும் - அவர்கள் படித்தறிவு பெறவும்மென பிரித்தானிய அரசினால் "குரல்" என்னும் வாரப் பத்திரிகை வெளியிடப்பட்டுவருகிறது.

## பெருந் திருவிழாக்கள்

யாழ். அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில் பெருந்திருவிழா 22-8-82 ல் ஆரம்பமாகியுள்ளன. தேர நிமமம் பேணப்படுகிறது:

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயப் பெருந்திருவிழா 26-8-82 வியாழன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறுகின்றன;

## திருமுறை பஜனை

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் ஒவ்வொரு பூரணைத் தினத்திலும் பண்ணிசைப் புலவர் திரு வே. சிவஞானம் அவர்கள் மாலை 6-30 — 7-30 வரை திருமுறைப்பஜனை நடாத்தி வருகிறார்கள்,

# நல்லைச் சண்முகனின் திருவருட்கோலம்

சூரபன்மனைச் சம்காரம் செய்ய முன்னர் அவன் செய்த தவத்தின் பயனாக அவனது அகந்தையையும், ஆணவத்தையும் சில கண நேரம் மறைத்துக் கொள்ளும் முகமாக ஸ்ரீ சண்முகப் பெருமான் தனது அருட்கோலத்தைக் காட்டியருள்கின்றார். இந்த அதிஅற்புதமான காட்சியைக் கண்ட சூரபன்மன்.

கோலமாமஞ்ஞை தன்னின் குலவிய குமரன் றன்னைப்
பாலனென்றிருந் தேனந் நாட் பரிசிவை யுணர்ந்திலேன் யான்
மாலயன் றனக்கு மேனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகாரணமாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தியன்றோ

— கந்தபுராணம்

என்ற பாட்டினுல் தன்னை மறந்து துதிக்கின்றான் முருகன் மறுபடியும் தனது திருவருட் கோலத்தை மறைத்துச் சக்தி வடிவேலினுல் சூரபன்மனை சம்காரம் செய்து அவனது மாயத் தன்மையை ஒழித்து, என்றும் அவனைத் தனதுடன் சேவலும் மயிலுமாக இருக்க அருள்புரிகிறார்.

நல்லைச் சண்முகனின் தேர்த்திருவிழாக் காட்சி இது போன்ற ஒரு நிகழ்ச்சியை பக்த கோடிகளுக்கு வருடா வருடம் அளித்து வருகின்றது. திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், திருத்தணிகை, பழமுதிர்சோலை, பழனி, சுவாமிமலை போன்ற ஆறுபடைவீடுகளில் காண முடியாத ஒரு அழகிய ஒப்பற்ற காட்சியாக இந்நல்லைத் தேர்த்திரு உலாக்காட்சி அமைகின்றதென்றால் அது ஒருபோதும் மிகையாகாது. காலையில் அழகிய வசந்த மண்டபத்திலிருந்து வெள்ளிச் சிம்மாசனத்தில் தங்கக் கவசமணிந்து ஆறுமுகத்துடன், பன்னிரு கைகளைக் கொண்டு வள்ளி தேவசேனசமேதராய் கந்தர் சஷ்டி கவசத்தில் கூறியபடி ஆடைஆபரணங்களும் அணியப் பெற்று, துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலன திருக்கோலத்துடன் எழுந்தருளி, மங்களவாத்தியங்கள் மங்கலாரி

— வண்ணையூர் மூ. சிவபசுபதி —

ராகம் முழங்க உள்வீதியுலா முடித்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கற்பூரசட்டி ஏந்தி நிற்க, கோபுர வாயிலை அடைந்து நிற்கும் காட்சியை உலகில் எங்கும் காணமுடியாது, இதை என்றென்றும் மனதில் வைப்போருக்கு மறுஜன்ம உபத்திரவம் கிடையாது என்று பெரியோர்கள் கூறுவார்கள். இரண்டு பக்கமும் மணிக்கூட்டுக் கோபுரத்துடன் கூடிய அழகிய இராஜ கோபுரத்தின் வழியாக ஜோதிரூபமாக சண்முகனுர் தேரை நோக்கிப் பவனி வரும் தோற்றம் பக்தர்களை மெய்மறக்கச் செய்யும். தேரில் ஆரோகணித்து, திருவீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்து பல மணி நேரம் அவர்களின் அர்ச்சனை, ஆராதனைகளை ஏற்று வீற்றிருக்கும் காட்சி ரம்மியமாக இருக்கும்,

அன்று மாலையில் தேர் அவரோகணமாகி, தேர் மண்டபத்தில் திவ்விய அலங்காரங்கள் மாற்றப்பட்டு துஷ்டர்களை அழித்து சிஷ்டர்களை பரிபாலனம் செய்த ஆவேசத்தை அடக்கு முகமாக, பச்சை நிறப்பட்டுக்களாலும், மாலைகளாலும் சண்முகப்பெருமான் அலங்கரிக்கப்பெற்று சாந்தமான ஓர் மூர்த்தத்தில் அவருக்கு ஷண்முகார்ச்சனை நடைபெற்று தேர் மண்டபத்திலிருந்து முருகனையே கோயில் இறங்கிவரும் காட்சியை பின்வரும் பாடல்மூலம் கண்டுகொள்ளக் கூடியதாக இருக்கும்.

அருவமும் உருவமுமாகி அநாதியாய்ப் பலவா யொன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங் குதித்தனன் உலக முய்ய

— கந்தபுராணம்

இத்தேர்த் திருவுலாவான சண்முகனின் திருவருட்கோலக் காட்சியை அடியார்கள் எல்லோர் மனங்களிலும் நன்றாகப் பதிய வைக்கின்றது.

# சத்து - சித்து - ஆனந்தம்

சித்தாந்த நன்னெறிஞர், கலாநிதி, சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள்
சமயப்பிரசாரகர் நல்லைஆதீனம்

முன் வளர்ச்சி - 2

மாகேசுர மூர்த்தங்கள் இருபத்தைந்தினுள், "சோமாஸ்கந்தா" மூர்த்தமும் இன்று அது மூர்த்திக்குரிய ஒரு அர்ச்சனை நாமம் 'சச்சிதானந்த விக்கிரகம்" என்று அவரைக் குறிக்கும் சத்துச் சித்து ஆனந்தம் என்ற மூன்று சொற்களும் சேரும்போது "சச்சிதானந்தம்" என வரும். உண்மை அறிவு இன்பம் என்பது இதன் பொருள். சிவபெருமானது திருவுருவம் உண்மையறிவின வடிவினது என்பது இதனுல் விளங்கும், சோமாஸ்கந்த மூர்த்தத்தில் சிவபெருமான், உமாதேவி முருகன் ஆகிய மூன்று மூர்த்திகளும் இடம் பெற்றிருப்பர். சிவபெருமானை சத்து மூர்த்தியென்றும் அவரின் வேறல்லாத உமாதேவியாரைச் சித்து என்றும். அவர்களின் வேறல்லாத முருகப் பெருமானை ஆனந்த மூர்த்தியென்றும் ஞான நூல்கள் கூறுகின்றன.

'சந்தெனச் சொல்லும்
தாவில் சிவத்திலும்
சித்தெனச் சொல்லும்
தேவி யிடத்திலும்
புத்திரப் பெயர்
பூண்டில ஆனந்த
வத்துவின் கழல்
வாழ்த்தி வணங்குவாம்

என்று பாம்பன் சுவாமிகள் முருகப் பெருமானைத் துதிக்கிறார்கள். எண்ணிக்கையால் மூன்றாக இருக்கும் இம்மூர்த்திகள், மூவரும் பொருளால் ஒருவரே என்பது சித்தாந்த சைவ பாரம்பரியத்தில் அறிவும் அநுபவமும் பெற்றவர்களுக்கு நன்கு விளங்குவதாகும். "பூவண்ணம் பூவின் மணம்போல மெய்ப்போத இன்ப மானவனை மெய் கொண்டவன்" என்பது திருவிளையாடற் புராணம். பூவும் அதன் வண்ணமும் மணமும் எண்ணிக்கையால் மூன்றாக அறியப்படுவனவே னும் கலப்பு நிலையால் ஒன்றாகக் காணப்படுவது கண்கூடு. அது போலவே சத்துப் பொருளாகிய சிவபெருமானும், சித்துப்பொருளாகிய உமாதேவியாரும், ஆனந்தப் பொருளாகிய முருகப்பெருமானும் எண்ணிக்கையால் மூவராக இருந்து பொருளால் ஒன்றாக விளங்கி உயிர்களுக்கு அருள் புரிவார்கள்.

[தம்பலகாமம் ஆதிகோண நாயகர் கோயில் கும்பாபிஷேக மலரிலிருந்து பெறப்பட்டது]

## பாதயாத்திரை

தமிழ்க் கடவுளாகிய முருகன் அடியார்களைக் காப்பதற்காக அசுர சக்திகள் அனைத்தையும் ஒருங்கே அழித்த வரலாறு அனைவரும் புரிந்த அற்புதமான ஒன்றாகும். கலியுகக் கொடுமைகள் நீங்கி மக்கள் பயமின்றி இன்பமாக வாழவே முருகன் திருவவதாரம் நிகழ்ந்தது. தமிழ் மக்களைக் காக்கும் தலைமைத் தெய்வமாகிய நல்லூர்க் கந்தன் திருவிழா நாட்களில் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளிலுள்ள சைவ ஆலயங்கள் பலவற்றிலுமிருந்து அடியார்கள் முருகன் புகழ் பாடி நல்லூர் நோக்கிப் பாதயாத்திரை புரிவதும், அடியார்களைப் பொது மக்கள் வழிமெங்கும் வரவேற்று உபசரிப்பதும், பெரியோரின் உபதேச மொழிகளைக் கேட்பதும், அதனுல் சுட்டறுவதும் மன அமைதி பெறுவதும் பல ஆண்டுகளாகத் தெய்வத திருவருளால் நடைபெற்று வருகின்றது. இவ்வாறாக பதபல ஆலயங்களிலும் இருந்தும் பஜனையுடன் பாதசாரிகளாக வரும் அடியார்கள் நெடுஞ்சாலையில் செல்லும் பெரிய பாதயாத்திரீகர் கூட்டத்துடன் சங்கமமாகி வழியிலுள்ள ஆலயங்களில் வழிபாடுகளை ஆற்றி நல்லூரைச் சென்றடைந்தனர்.

நயினுதிவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயிலில் 15-8-82 ஞாயிற்றுக்கிழமை பகல் வழிபாடு செய்து அடியார்கள் பி.ப 2 மணியளவில் அங்கிருந்து புறப்பட்டு புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி, பெருங்காடு ஆகிய இடங்களிலுள்ள ஆலயங்களை வழிபட்டு அன்றிரவு பெருங்காட்டில் தங்கினுர்கள். மறுநாள் 16-8-82 திங்கட்கிழமை அதிகாலை 4 மணியளவில் அங்கிருந்து புறப்பட்டு அம்பலவாணர் அரங்கில் பிரார்த்தனை செய்தபின் மு.ப 10 மணியளவில் வேலணை பங்களாவடி முருகன் கோயிலில் தங்கி வழிபாடுகள் செய்து அன்று பி.ப 3 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு மண்கும்பான் பிள்ளையார் கோயில், அல்லைப்பிட்டி, பண்ணை வழியாக அன்று மாலை 7 மணியளவில் வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலை அடைந்து அன்றிரவு அங்கு தங்கி அடியார்கள் மறுநாள் 17-8-82 செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணி தொடக்கம் திருமுறைப் பாராயணம் அகண்ட நாம செபம், சிவபூசை மாநாடு ஆகிய நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி காலை 7 மணியளவில் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைச் சென்றடைந்தனர்.

## ஆலயங்களுக்கு .. . . . .

( 1-ம் பக்கத்து வளர்ச்சி )

சைவாலயங்கள் இல்லாதின்றி விளங்கவேண்டியதன் அவசியத்தைச் சொல்லவேண்டியதில்லை.

ஆலய நூலகத்துக்கான வெளியீடுகள் யாவை எனின் முக்கியமானவை இவையே.

1] வேத சிவாகம நூல்கள்
2] திருமுறை வெளியீடுகள்.
3] மெய்கண்டசாத்திர நூல்கள்
4] பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம், திருச்செந்தூர்ப் புராணம்,
5] கோயில் வரலாறு
6] கோயிற் பதிகங்கள்
7] மகாகும்பாபிடேகமலர்கள்
8] நாவலர் நூல்கள்
9] சைவப்பெரியாரின் நூல்கள்
10] சைவசமயப் பத்திரிகைகள்
11] ஆலயக் கிரிகைகள் சம்பந்தமான சோதிட வெளியீடுகள் சஞ்சிகைகள், நூல்கள்

எனலாம். சைவபரிபாலனசபை போன்ற பழைய சங்கங்கள் இந்த ஆலோசனையைச் செயற்படுத்த முற்படுதல் நன்று.

## இரண்டாம் வகுப்பிலேயே முழுதும் மனப்பாடம்!



பத்தர்: "இரண்டாம் வகுப்பு படிக்கிற காலம்...! இருஷ்ண பிள்ளை என்ற சட்டம்பியாரிடம் பாடங்கேட்டது! 'சைவவினாவிடை' முழுதும் மனப்பாடம்! 'பிள்ளைச் சட்டம்பியார்' குட்டினகுட்டு அப்பா! இப்பவும் தலை இருக்கிறக்கும்...!

சித்தர்: "என்ன? இரண்டாம் வகுப்பிலா? சைவவினாவிடை முழுதும் மனப்பாடமா? அது எந்தப் பள்ளி அம்மான்......?

பத்தர்: 'நாவலர் பள்ளியிலதான் பாடங்கேட்டது! நாலு முழ வேட்டியும் சால்வையுந்தான் போட்டுக்கொள்கிற பிள்ளைச் சட்டம்பியாருக்கு விருவ்வட நல்ல அரைஞ்ச பாடம்! அந்த மனானிடம் பாடங்கேட்டவை இன்னும் பேசிப் புகழ்வார்கள்!

( - "தவண்மார் - நாதன்"

Hindu Organ

Fri. 20, 27-8-82

## *BRINGING UP OF THE BLOSSOMING YOUTH*

Year in and year out there has been a lot of tall talk on the subject of education in this country. Schemes and syllabuses have been prepared at the expense of the common coffers and left in cold storage. And every statesman and all politicians have expressed their fears that the general atmosphere of the people is becoming polluted by the dissemination of conflicting doctrines and confusing dogmas. There is now a note of despondency; moral nature has fallen below standard; mental qualities have deteriorated. CHARACTOR OF THE CITIZEN has become questionable!

Knowing as we all do that the plight of the people is pathetic, what action have we and our representatives taken to remould the mind of the young and bring them up in the proper manner

Intellectual instruction must be such as to include moral training. Character must be built from the first grade and the process must be maintained in all grades inclusive of higher education in the Universities.

If learning had been adored by our ancestors and if they had offered prayers to the Goddess of Learning, the natural inference would be that there must be solemnity in the sphere of studies.

Making available to the young all descriptions of destructive activities and demoralising tendencies by means of the Theatre the Cinema, the Television and scurrious writings, the Authorities have sinned against the people by exposing the blossoming youth to all that is bad in taste, injurious in character and destructive in tendency.

It will be, therefore, quite clear that the Government has to exert itself in a serious manner in the matter of weeding out the unseemly creepers that have encroached on the cultural life of this country. To do this cleansing, the teaching of religious morals in all grades of education becomes absolutely necessary.

The young therefore, should be made to feel that instructions such as "avoid alcohol, slaughter of animals, smoking and seduction" are really religious commandments that should be obeyed.

Such a constructive program should be incorporated in the sylabuses of educational institutions

---

**Letter to the Editor**

## Sri Lanka Constitution

The Constitution of any country is one of its most important assets. Without a suitable constitution, no country could prosper or be in a position to serve the rest of the world. A suitable Constitution for Sri Lanka is yet to be framed. It is trusted that such a Constitution will become an accomplished fact at some early point of time, through the joint efforts of the people. In the meanwhile amendments could be effected to the present Constitution.

The following are among such amendments. :-

a) Declaration of Sinhala, English and Tamil as concurrent official languages for Sri Lanka for all purposes in all parts of the country in like manner, and for external use in foreign countries.

b) Election of Vice Presidents for the Republic of Sri Lanka to serve along with the President

c) Provision for optional [not compulsory] study of Sinhala, Tamil, and English.

d) Provision for administration of the country on the basis of Sarvodaya [General welfare], and one for all and all for one, including National Welfare and happiness, simpler and less expensive standard of living as far as practicable and national integration and unity.

e) Provision for the promotion of religious, moral, ethical, cultural, advancement, reconciliation, compromise and pursuant of the Middle Path or the Golden Mean.

f) Provision for the promotion of international peace, goodwill and cooperation.

No harm could ensue by providing such adjustments, on the contrary the country will gain greately.

It is superfluous to state that all sections of the country's population should enjoy and exercise equal rights and status, in accordance with the principles of Sarvodaya. The Indian section of Sri Lanka's population requires requisite steps to be taken to afford such relief. Steps are being taken in this connection Hence no reference is made in this connection Further, to reduce controversy, reference is not made now to other important Constitutional requirements.

It is to be hoped that His Excellency the President, the Government Party and the Opposition Parties would be pleased to consider favourably the foregoing reasonable submissions beneficial to the entire country and to all sectors thereof.

The blessings of the Maha Sangha and of the clergy of all religious denominations and of other organisations are also prayed for.

The help of the Press and the Judiciary is similarly pleaded for.

Finally it goes without saying that the devoted and detailed attention of every individual in the country is urgently required in this context.

S. Sivasubramaniam
Honorary Secretary
Council for National Unity and Welfare of Sri Lanka and Co-founder thereof.

---

# Indifferent To Everything

The Administration seems to be having no inclination for taking any action to remedy failures in the working of the Telecommunication Service, particularly in the Northern Peninsula.

Direct dialling, and instant contact are some of the endearing terms used by the Authorities in making vain - glorious statements about their wonderful schemes. At the same time the use of the telephone is occasionally denied to the caller, everybody in the Service being engaged with some personal problem or other.

If within the all too little space of a four hundred square miles in our crowded peninsular district, bookings for telephone calls get blocked for odd reasons, what advantage can the new schemes and newer innovations be said to have achieved.

Here is an age where every minute, nay second counts. Loss of time leads to loss of development

And that is not all. Even in the prevention of crime the use of the telephone becomes imperative. Information to the Police by means of telephone messages could well help the guardians of the people take immediate action to thwart criminal activities or apprehend miscreants.

Development has become a catch word for politicians. But these persons who talk politics fail to see, that there is development in the indifferent attitude of those who form the Administrative Service at all levels. If only these officers develop affection for the common man there would not arise any setback, lapse delay or disruption in any service including the system of communication bya net work of telephone

INDIFFERENCE TO DUTY IS INIMICAL TO THE DEVLOPMENT OF THE COUNTRY.

---

நாடக இலக்கண........

(மூன்றாம் பக்கத்து வளர்ச்சி)

வித்தகத்திறல் முன் அணியில் நின்று கலையரசு என்ற நிலைமைக்காளானவர் திரு. க. சொர்ணலிங்கம் அவர்கள்.

இந் நாட்டுக் கலைஞர்கள் தாமாக இயங்கி நாடகத் துறைக்கு ஈழத்துக் கலாசார எழிலை அமைத்துக் கொடுத்த நடன சபைகள் யாழ் நகரிலும் கொழும்பு மாநகரிலும் இயங்கி வந்த காலம் இற்றைக்கு எழுபதாண்டுகளுக்கு முன் எனலாம். சுபோத விலாச சபை, சரஸ்வதி விலாச சபை போன்றவற்றிலே நாடகத்துறைப் பண்டிதர்களாகப் பல அறிஞர்கள், ஆங்கில மொழியிற் கல்வி பயின்றவர்கள் விளங்கினர்.

வண்ணை வை. இராமநாதன், பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தர், தாவடிப் பொன்னையா உபாத்தியாயர் நாடகம் நடித்த காலத்தில் அயோத்தியா காண்டம்-மயானகாண்டம் முதலிய நாடகங்கள் முன்னணியில் வரவேற்கப்பெற்றன. அக்காலத்தில் இளைஞராகத் திரு. க. சொர்ணலிங்கம் இக்கலையை இரசித்து அதன் மயமாகிக் கொழும்பு மாநகரில் நாடக முன்னேடியாகப் பன்னெடுங் காலம் விளங்கி வந்தனர். வைத்திய கலாநிதி இரத்தினசோதி சரவணமுத்து இந்த நாடக எழுச்சிக்குப் பேராதரவு புரிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது,

பாதுகாபட்டாபிஷேகம் அரிச்சந்திரன்கதை மனோகரா முதலிய நாடகங்கள் பலமுறை மேடையேறின. இவற்றிலே ஏற்ற பாத்திரங்களை எடுத்து நாடகக் கலையை நன்கு புரிந்து உயிர்ப்புநடிப்பில் உயர்ந்து நின்றனர் திரு. சொர்ணலிங்கம் அவர்கள்; அவ்வழியில் அக்கலையுணர்ச்சியைத் தன்னுடன் வைத்துக்கொள்ளாது அதற்குரியவர்களை ஆங்காங்கு தொடர்கொண்டு அவதானித்து அவர்களுக்கு நாடகக் கலை விமர்சனம் செய்து பயிற்றிவந்த பெருமையும் கலையரசுக்குண்டு.

நாடகம் எழுதுவது ஒன்று, அதனை நடித்து அதன் உயிர் நிலையை உள்ளவாறு காட்டுவது இன்னென்று.

கலையியவின் கவினை நனியுணர்ந்தமையில் உடல் நிலையும் திடமாக வாழ்ந்து தொண்ணூற்று நான்கு வயதினராய் இயற்கையெய்தினார் இவர்.

நீண்ட வாழ்க்கை பெற்ற [illegible] நிலையும் நடைகாலம் நிலைநிறுத்தும் என்ப துண்மை.

---

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

---

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450, K. K. S. Road, Vannarponnai, Jaffna ( Telephone: 356 ) on Friday, 20, -278-82*

Editor-in-Chief:
R. N. Sivapirakasam

